அரையாண்டுத்தேர்வு – Dec - 22

23.12.22

வகுப்பு: XI வணிகவியல்

மதுரை மாவட்டம்

மொத்தமதிப்பெண்கள்: 90 நேரம்: 3.00மணி

பிரிவு – I (20*1=20)

அனைத்துவினாக்களுக்கும்விடையளிக்கவும்

1. இடத்தடைஇதன்மூலம்நீக்கப்படுகிறது.
அ. போக்குவரத்து ஆ. பண்டகசாலை இ. விற்பனையாளர் ஈ. காப்பீடு

2.அதிக அளவுஅபாயத்தைக்கொண்டது
அ. உற்பத்தித்தொழில் ஆ. வணிகம் இ. வியாபாரம்ஈ. இவைஅனைத்தும்

3.கூட்டாண்மைஉண்டாக்கப்படுவது
அ)ஒப்பந்தத்தால் ஆ)கூட்டாளிகளிடையேஉறவு இ)அரசின்வழிகாட்டல் ஈ)நட்பின்அடிப்படையில்

4. நுகர்வோர்கூட்டுறவு ______________________முதன்முதலாகவெற்றிபெற்றது
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா

5. இந்திய மைய வங்கி என்பது
அ) பி.என்.பி ஆ) எஸ்.பி.ஐ இ) ஐ.சி.ஐ.சி.ஐ ஈ) ஆர்.பி.ஐ.

6.மின்னணுவங்கியினை ______________________ மூலம் செயல்படுத்தலாம்.
அ)கணினிகள் ஆ) கைபேசிகள் இ)ATM அட்டை ஈ) மேலேஉள்ளஅனைத்தும்

7. பண்டகக்காப்பகம் ______________________ மையமாகபொருட்களைவைத்திருக்கிறது.
அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல் இ) வழங்கல் ஈ)விற்பனைசெய்தல்

8. ______________________ஒருபொதுக்காப்பீட்டுவகையினைச்சார்ந்ததுஅல்ல
அ) கடல்சார்காப்பீடு ஆ) ஆயுள்காப்பீடு இ) மருத்துவக்காப்பீடு ஈ) தீகாப்பீடு

9. பெயர்ச்சியியலின்முக்கியநன்மை
அ) உற்பத்திமேம்பாடு ஆ) செலவுகளைகுறைத்தல் இ) இலாபம்ஈட்டுதல் ஈ) பண்டகக்காப்பு

10. அமெரிக்கவைப்புஇரசீதுவெளியிடப்படுவது
அ) கனடா ஆ)சீனா இ) இந்தியா ஈ) அமெரிக்கஐக்கியநாடுகள்

11. வழங்கல்வழியில்உள்ளமுதல்இடைநிலையர்யார்?
அ)மொத்தவியாபாரி ஆ)உற்பத்தியாளர் இ)சில்லறைவியாபாரி ஈ)வாடிக்கையாளர்கள்

12.உள்நாட்டுவியாபாரத்தை ______________________ வகைகளாகப்பிரிக்கலாம்
அ)மூன்று. ஆ) நான்கு இ)இரண்டு ஈ)ஐந்து

13. EPC யின்விரிவாக்கம் அ) ஏற்றுமதிசெயல்முறைகுழு ஆ)ஏற்றுமதிவளர்ச்சிக்குழு
இ)ஏற்றுமதிசரக்கேற்றிகுழு ஈ) ஏற்றுமதிவளர்ச்சிகாங்கிரஸ்

14. செல்லுபடியாகக்கூடியஏற்பு
அ) அறுதியிட்டுக்கூறுதல் ஆ) தகுதியற்றது
இ) அறுதியிட்டுக்கூறுதல்மற்றும்தகுதியற்றது ஈ) நிபந்தனையுடையது

15. மூன்றாம்நபர்என்றுயாரைக் கூறுகின்றோம்?
அ) வாக்குறுதிஅளிப்பவர் ஆ) வாக்குறுதிபெறுபவர் இ) முகவர் ஈ) சட்டரீதியானபிரதிநிதி

16.வருமான வரி என்பது
அ) வியாபாரவரி ஆ) நேரடிவரி இ) மறைமுகவரி ஈ) சேவைவரி

17. சரக்குமற்றும்சேவைவரிஎன்பது
அ) நேரடிவரி ஆ) மறைமுகவரி
இ) சரக்குமற்றும்சேவைகளின்வகையைபொருத்தது ஈ) வியாபாரநடவடிக்கைகளைச்சார்ந்தது

18. பின்வருவனற்றில்எவைகூட்டுப்பங்குநிறுமத்தின்பண்புகள்?
i) தனியானசட்டநபர்தன்மையுடையதுஅல்ல ii) வரையறுபொறுப்பு
iii) நீடித்தவாழ்வுஇல்லை iv) பொதுமுத்திரை
அ) i மற்றும் ii ஆ) ii மற்றும் iv இ) i மற்றும் iv ஈ ) I மற்றும்iii

19. பொருத்துக
1. பொருளாதாரநோக்கங்கள் - i) வேலைவாய்ப்புஅளித்தல்
2. சமூகநோக்கங்கள் - ii)நுகர்வோரைதிருப்திப்படுத்துதல்
3. நிறுவனநோக்கங்கள் - iii) பொதுநலன்
4. தேசியநோக்கங்கள் -iv)இலாபம்ஈட்டுதல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | I | ii | iii | iv |
| ஆ) | iv | iii | ii | i |
| இ) | ii | iii | I | iv |
| ஈ) | iii | iv | I | ii |



Scanned with CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

20. கூற்று (A):மலை, காடுமற்றும்பாலைவனம்போன்றபகுதிகளில்சிறுசிறுசுமைகளைஏற்றிச்செல்லகுதிரை, கோவேறுகழுதை, கழுதை, ஒட்டகம்மற்றும்யானைபோன்றபொதிவிலங்குகள்பயன்படுத்தப்படுகின்றன
காரணம்
(R):நவீனபோக்குவரத்துசாதனங்களால்எளிதில்அணுகமுடியாதபகுதிகளில்பொதிவிலங்குகள்பயன்படுத்தப்படுகின்றன
அ) A மற்றும் R சரிமேலும் R என்பது A யிற்கானசரியானவிளக்கம்
ஆ)A மற்றும் R சரிமேலும் R என்பது A யிற்கானதவறானவிளக்கம்
இ) A சரிஆனால் R தவறு
ஈ) A தவறுஆனால் R சரி

## பிரிவு – II (7*2=14)

குறிப்பு: ஏதேனும்ஏழுகேள்விகளுக்குப்பதிலளிக்கவும். வினாஎண்.30 ற்குகட்டாயமாகபதிலளிக்கவும்.

21. பண்டமாற்றுமுறைஎன்றால்என்ன?
22. உறங்கும்கூட்டாளிஎன்பவர்யார்?
23. பன்னாட்டுநிறுமத்திற்குஏதேனும்இரண்டுஉதாரணங்களைதருக.
24.சிறுகுறிப்புவரைக: பற்றுஅட்டை
25. பெயர்ச்சியியல்என்றால்என்ன?
26. உலகளாவியவைப்புஇரசீதுஎன்றால்என்ன?
27. மடங்குக்கடையின்பொருள்யாது?
28. சட்டரீதியானபிரதிநிதிஎன்பவர்யார்?
29.வருமானவரிஎன்றால்என்ன?
30. வங்கியில்ஒருகுறிப்பிட்டவரம்பிற்குஉட்பட்டுஒருவாடிக்கையாளரின்வங்கிநடப்புக்கணக்கில்வரவில்இருக்கும்தொகையைவிடஅதிகமானதொகையைஎடுத்துப்பயன்படுத்திக்கொள்ளும்ஒருஏற்பாடு______________ஆகும்.

## பிரிவு – III (7*3=21)

குறிப்பு:ஏதேனும்ஏழுகேள்விகளுக்குப்பதிலளிக்கவும். வினாஎண்.40 ற்குகட்டாயமாகபதிலளிக்கவும்.

31. மனிதச்செயல்பாடுகள்என்றால்என்ன?
32. வரையறாப்பொறுப்புஎன்றால்என்ன?
33. மின்னணுவங்கியியல்என்றால்என்ன?
34. சமூகப்பொறுப்புணர்வின்வகைகளைவரிசைப்படுத்துக.
35. சுயஉதவிக்குழுக்களின்ஏதேனும்மூன்றுசிறப்பம்சங்களைவிளக்குக
36.மறுஏற்றுமதிவியாபாரம்என்றால்என்ன?
37. உடன்படிக்கைஎன்றால்என்ன?
38. பாண்டியர்ஆட்சிக்காலத்தில்உருவாக்கப்பட்டதுறைமுகங்கள்யாவை?
39. சரக்குமற்றும்சேவைவரியின்நோக்கங்கள்யாவை?
40. ஒருநிறுவனம்அஞ்சல்வழிமூலமாகவோ, கைபேசிவாயிலாகலோவாடிக்கையரிடமிருந்துஆணைகளைப்பெற்றுஅவர்களுக்குப்பொருட்களைஅனுப்பிவைக்கும்வணிகத்தின்பெயர்என்ன? உதாரணம்தருக

## பிரிவு – IV (7*5=35)

**அனைத்துவினாக்களுக்கும்விடையளிக்கவும்**

41.பண்டமாற்றுமுறைக்கானநிபந்தனைகளாகக்கூறப்பட்டுள்ளனயாவை?(அல்லது)தனிஉரிமையியலின்நன்மைகளைவிவரி.(ஏதேனும்ஐந்து)
42. பன்னாட்டுத்நிறுமத்தின்நன்மைகளைவிவரி.(ஏதேனும்ஐந்து)(அல்லது) ஏதேனும்ஐந்துதனிநபர்முதலீட்டுவழிகளைவிளக்குக.
43. காப்பீட்டின்கோட்பாடுகளைவிவரி.(ஏதேனும்ஐந்து)(அல்லது) நேரடிவரியையும்மறைமுகவரியையும்வேறுபடுத்துக.(ஏதேனும்ஐந்து)
44. தனியாள்வணிகத்தின்சிறப்பம்சங்களைவிளக்குக?(ஏதேனும்ஐந்து) (அல்லது) இந்தியரிசர்வ்வங்கியின்நிறுவனக்கட்டமைப்புபற்றிவிரிவாகவிளக்குக.
45. சில்லறைவியாபாரஅமைப்புகளின்வகைகள்(ஏதேனும்ஐந்து)(அல்லது) செலுத்தல்சமநிலையின்சிறப்பம்சங்கள்(ஏதேனும்ஐந்து)
46. ஒப்பந்தம்மற்றும்உடன்படிக்கைக்கும்உள்ளவேறுபாடுகள்யாவை?(ஏதேனும்ஐந்து)(அல்லது) வணிகத்தின்பல்வேறுதடைகளைக்விளக்குக.(ஏதேனும்ஐந்து)
47.அமைப்புமுறையேட்டில்அடங்கியுள்ளபொருளடக்கங்கள்யாவை?(ஏதேனும்ஐந்து)(அல்லது)கூட்டுறவுச்சங்கத்தின்நிதியைத்தவறாகப்பயன்படுத்தமுடியுமா?ஆம்எனில்அதற்கானகாரணங்களைக்கூறுக.



Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**+1 வணிகவியல் Hly Mdu Dist. Dec 2022**

**சரியான விடை**

1. (அ) போக்குவரத்து
2. (அ) உற்பத்தி தொழில்
3. (அ) ஒப்பந்தத்தால்
4. (அ) இங்கிலாந்து
5. (ஈ) ஆர்.பி.ஐ.
6. (ஈ) மேலே உள்ள அனைத்தும்
7. (இ) வழங்கல்
8. (ஆ) ஆயுள் காப்பீடு
9. (ஆ) செலவுகளை குறைத்தல்
10. (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
11. (அ) மொத்த வியாபாரி
12. (இ) இரண்டு
13. (ஆ) ஏற்றுமதி வளர்ச்சி குழு
14. (இ) அறுதியிட்டு கூறுதல் மற்றும் தகுதியற்றது
15. (இ) முகவர்
16. (ஆ) நேரடி வரி
17. (ஆ) மறைமுக வரி
18. (ஆ) ii மற்றும் iv
19. ஆ) iv iii ii i
20. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை:** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

**22. உறங்கும் கூட்டாளி:** தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி என்று பெயர். ஆனால் இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார். வெளியாட்களுக்கு அவர் கூட்டாளி போன்று தோன்றாமல் பார்த்துக் கொள்வார்.

**23. பன்னாட்டு நிறுவனத்திற்கு ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.**

பாட்டா, கோல்கேட் பாமொலிவ், சோனி கார்ப்பரேசன், சுசூகி, டைமெக்ஸ்

**24. பற்று அட்டை:** தானியங்கி பணம் வழங்கும் அட்டையே பற்று அட்டை என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டைப் பயன்படுகிறது.

**25. பெயர்ச்சியியல்:** சந்தையுடன் தொடர்புடைய போக்குவரத்துப் பணி பெயர்ச்சியில் மிக முக்கியப் பங்கை வகிக்கிறது. மேலும் மிக நேர்த்தியான ஒன்றுக்கொன்று தொடர்புடைய போக்குவரத்தின் விரிவாக்கமே பெயர்ச்சியியல் ஆகும்.

**26. உலகளாவிய வைப்பு இரசீது:** அந்நிய நாட்டு முதலீட்டாளரிடமிருந்து நிதி திரட்டும் நோக்குடன், அந்நிய செலாவணியில், வெளிநாட்டில் வெளியிடப்படும் ஒரு மாற்று முறை ஆவணமே உலகளாவிய வைப்பு இரசீது எனப்படும். இது அமெரிக்கா தவிர்த்து, பிற நாடுகளில் உள்ள வெளிநாட்டு பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது.

**27. மடங்குக் கடை:** தயாரிப்பாளாகடைகள் (அ) இடைநிலையர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான கடைகளை அமைத்து தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லரை கடைகள் மடங்கு கடைகள் என்கிறோம். இதனை தொடர் பண்டகச்சாலைகள் எனவும் அழைக்கப்படுகிறது. எகா:- பாட்டா ஷீ கம்பெனி.

**28. சட்டரீதியான பிரதிநிதி:** தனிப்பட்ட ஆற்றல் சார்ந்த ஒப்பந்தங்களில் வாக்குறுதி அளித்தவர் ஒப்பந்தத்தை தனிப்பட்ட முறையில் நிறைவேற்ற வேண்டும். அந்நிலையில் வாக்குறுதி அளித்தவர் இறந்துவிட்டால், அந்த ஒப்பந்தம் முடிவடைகிறது. ஆயினும், தனிப்பட்ட ஆற்றலை நம்பியில்லாத ஒப்பந்தங்களை பொருத்தவரை, வாக்குறுதி அளித்தவர் சட்டரீதியான வாரிசுதாரர் அவரது மறைவிற்கு பிறகு நிறைவேற்றலாம்.

**29. வருமானவரி:** ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி வருமானவரி எனப்படும். இது ஒரு நேர்முக வரி ஆகும். இவ்வரியில் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலாது.

**30.வங்கி மேல் வரைப் பற்று**

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மனித செயல்பாடுகள்:** மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.

**32. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

**33. மின்னணு வங்கியியல்:** தற்போது அனைத்து வங்கிகளும் வங்கி பரிவர்த்தனைகான நேரம் மற்றும் செலவைக் குறைத்து, வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன. வரைவோலைகள், காசோலைகள் மற்றும் காகித அடிப்படையிலான நிதி பரிமாற்றங்களுக்கு இந்தச் சேவை ஒரு மாற்று ஆகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**34. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.**

- பொருளாதார பொறுப்புணர்வு
- சட்டப் பொறுப்புணர்வு
- தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு
- தன் விருப்ப பொறுப்புணர்வு

**35. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.**

"முதலில் சேமிப்பு" பிறகு "கடன்" என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

சுய உதவிக் குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை, உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.

சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது.

குழுக்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்.

ஒவ்வொரு குழுவிலும், ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.

ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.

சுய உதவிக்குழு கூட்டமானது, ஓய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும், அதிகப் பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

**36. மறு ஏற்றுமதி வியாபாரம்:-**

ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**37. உடன்படிக்கை** 2(e)ன் படி "ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழியின் தொகுதியும்" உடன்படிக்கை ஆகும.

**38. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?**

கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

**39. சரக்கு மற்றும் சேவை வரி:** சரக்கு மற்றும் சேவைகள் நகரும் போது விதிக்கப்படும் வரி ஆகும். இது ஒரு சேருமிடம் சார்ந்து நுகர்வு வரி மற்றும் அளிப்பு சங்கிலியின் ஒவ்வொரு படிநிலையிலும் காட்டப்பட்ட மதிப்பின் மீது வசூலிக்கப்படுகிறது.

**40.மின்னணு வணிகம்** அமேசான் ஜெமோட்டோ…

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாக கூறப்பட்டுள்ளன யாவை?**

ஒவ்வொருவரும் தேவைக்கு அதிகமாகப் பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். இருவருக்கும் அப்பொருட்கள், உரிமை மாற்றுத் தேவையாக இருக்க வேண்டும். பரிமாற்றத்தின் போது இருவருக்கும் நேரடித் தொடர்பு முக்கியமாகக் கருதப்படும்.

**41.ஆ. தனி உரிமையியல் நன்மைகள்**

1. இடர்களைக் குறைத்தல் 2. வணிக விரிவாக்கம் 3. விளம்பரச் செலவு 4. செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்.

**42.அ. பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகள்:**

**குறைந்த பட்ச கூலி:-**

குறைந்த பட்சக் கூலி வழங்கும் நாடுகளில், தனது நிறுவனங்களை அமைப்பதால், குறைந்த செலவில் பொருட்களையும், சேவைகளையும் வழங்க முடிகிறது. அடக்க விலையில் நன்மைகளைப் பெறுவதால், தரமான பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவில் கிடைக்க வகைச் செய்யப்படுகிறது.

**தரமான பொருட்கள்:-**

வளங்கள், வசதிகள், அனுபவம், சிறப்பறிவு ஆகியவற்றுடன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்கள், தாராளமாக செலவிடுவதால், தரமான பொருட்களையும், சேவைகளையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடிகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்கின்றது:-**

பன்னாட்டு நிறுமங்கள் தரமான பொருட்களைத் தயாரித்து வழங்குவதால், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்கிறது.

**பயன்படுத்தப்படாத வளங்களை முறையாகப் பயன்படுத்துதல்:-**

இவை, தனது சிறப்புத் தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி, பயன்படுத்தாமல் இருக்கும் மனித வளங்களையும், பயனற்ற சொத்துக்களையும் முழுமையாகப் பயன்படுத்துவதனால் நாட்டின் தேசிய வருமானம் பெருமளவு உயர்கிறது.

**நாட்டின் செலவாணி செலுத்துநிலை வளர்ச்சி:-**

இவை, ஏற்றுமதியை அதிகப்படுத்தி வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. இதனால், நாட்டின் செலுத்து நிலையை பலப்படுத்துகின்றது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**42.ஆ. ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.**

**பொது வருங்கால வைப்பு நிதி:-** இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில் இது மிகப் பாதுகாப்பான நீண்ட கால முதலீட்டு வாய்ப்பாகும்.

இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.

இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.

இதில் செலுத்தப்பட்ட தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெற முடியாது.

முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால் இந்தக் கணக்கிலிருந்து கடன் பெற்று நிதி நெருக்கடியை சமாளித்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

**பரஸ்பர நிதிகள்:-**

பரஸ்பர நிதி என்பது, நிதி நிறுமங்கள் பொது மக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.

இதன் மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.

பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டாளர்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.

இலாப நோக்கம் உடைய திட்டம், உடனடியாக பணமாக்கும் திட்டம், பாதுகாப்பான திட்டம் மற்றும் இந்த மூன்றையும் உள்ளடக்கிய சமச்சீர் திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

முதலீட்டாளர்கள் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, சரியான முதலீட்டு திட்டத்தினை தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.

**பொது வைப்புகள்:-**

வங்கிகளில் நிலை வைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.

இதில் முதலீட்டாளர் முதலீட்டு கால அளவை மிக்க கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.

பொது வைப்பு வசூலிக்கும் நிறுவனங்கள், அந்த வைப்புத் தொகைக்கு எந்தவிதக் காப்பீட்டு வசதியையும் அளிப்பதில்லை.

இது, ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் வருவதும் அல்ல.

நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.

**காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி:-** ULI என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும். இது காப்பீடு செய்பவருக்கு இழப்பை ஈடு செய்வதோடு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

**43.அ. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி**

**மிக்க நம்பிக்கை:-** இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.

காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**காப்பீடு பெறுநலன்:-** காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.

**ஈட்டுறுதி:-** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது.

**அண்மைக் காரணம்:-** ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.

காப்பீட்டு ஒப்பந்தத்தின் போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார்.

**பகிர்ந்தளித்தல்:-** ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு “இரட்டைக் காப்பீடு” என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**பகர உரிமை:-** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும். காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.

அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாடுக்கு எதிராக அமைந்துவிடும்.

| 43.ஆ. நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு விற்பனையாளரால் அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்படுகிறது. | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு ஆனால் வியாபாரியால் செலுத்தப்படுகிறது. |
| சொத்துவரி, வருமானவரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி. |
| வரி வாய்ப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. | வரி ஏய்ப்பு காண வாய்ப்பு குறைவு |
| இது பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது. | இது பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| மாற்ற முடியாது | மாற்ற முடியும். |
| சொத்து வரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

**44.அ. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?**

**தனிநபர் உரிமை:-**

இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-**

தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-**

தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-**

நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-**

இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-**

தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**44.ஆ. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.**

இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது,

2017ஆம் ஆண்டு முதல் 33 துறைகளை கொண்டுள்ளது.

மும்பை, தில்லி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்கள் துணைநிலை ஆளுநர்களின் தலைமையில் செயல்படும் வட்டார வாரியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

19 பிராந்திய அலுவலகங்களும், 11 துணை அலுவலகங்களும் இதன் கீழ் செயல்படுகின்றன.

இதனுடைய மத்திய இயக்குநர்கள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த வாரியத்தின் 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுவார்கள்.

அதில் உள்ளவர்கள் பின்வருமாறு:-

ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணை நிலை ஆளுநர்கள் நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்.

பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குனர்கள்.

இரண்டு அரசு அதிகாரிகள்

நான்கு இயக்குநர்கள் (வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**45.அ.**




**45.ஆ. செலுத்துதல் சமநிலையின் சிறப்பம்சம்**

இது ஒரு நாடு மற்றும் உலகின் பிற நாடுகளுக்கு இடையேயான அனைத்து பொருளாதார பரிமாற்றங்களுக்கான முறையான பதிவு ஆகும்

இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 12 மாத காலத்திற்கோ தயாரிக்கப்படுகிறது அதாவது பொதுவாக 12 மாதங்கள்

இது கண்ணுக்கு புலனாக் கூடிய மற்றும் கண்ணுக்கு புலனாகாத பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்களை உள்ளடக்கியது

இது நடப்புக் கணக்கு மற்றும் மூலதன கணக்கில் பதிவு செய்யப்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது

பொருளாதார நடவடிக்கைகள் இரட்டை பதிவு முறை கோட்பாட்டின்படி பதிவு செய்யப்படுகின்றன

| 46.அ. ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|
| சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும். | உடன்பாடு என்பது, மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதி மொழியும், உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும். |
| அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும். | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது. |
| ஒப்பந்தம் என்பது, உடன்படிக்கையை உள்ளடக்கியது. | உடன்படிக்கையில், எல்லா ஒப்பந்தமும் உள்ளடக்கியது அல்ல. |
| சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும். | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும். |
| அனைத்து ஒப்பந்தங்களிலும் சட்டபூர்வமான கடமை உள்ளன. | சட்டபூர்வமான கடமையானது அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. |

**46.ஆ. வணிகத்தின் பல்வேறு தடைகள்:**

**ஆள்சார் தடை:-**

பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-**

பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-**

பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-**

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-**

சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**பண்டப்பரிமாற்றத் தடை:-**

பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-**

உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

**47..அ. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?**

**பெயர் குறித்த உட்பிரிவு:-**

நிறுவனத்திற்கு சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது. அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களும் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் “வரையறுக்கப்பட்டது” என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.

**இடங்குறித்த உட்பிரிவு:-**

நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.

**நோக்கம் குறித்த உட்பிரிவு:-**

நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தையும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். நிறுமத்தின் துணை நோக்கங்கள் மூலம் முக்கிய நோக்கங்களை அடையத் தேவையான வழிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கும். இதில் குறிப்பிடப் பெறாத எச்செயலிலும் நிறுமம் ஈடுபடாது.

**பொறுப்புக் குறித்த உட்பிரிவு:-**

பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில் ஒவ்வொரு உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.

**முதல் குறித்த உட்பிரிவு:-**

நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்த பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**அமைப்பு குறித்த உட்பிரிவு:-**

பங்குதாரர்கள் தாங்கள் ஒருங்கிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது. பொது நிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இட வேண்டும்.

**47.ஆ. கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாக பயன்படுத்த முடியுமா? ஆம் எனில் அதற்கான காரணங்களைக் கூறுக.**

நிச்சயமாக கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை தவறாகப் பயன்படுத்த முடியும். எப்படியெனில், நிர்வாக குழுவில் இருப்பவர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருக்க நேர்ந்தால், சங்கங்களின் நிதியை கையாடல் செய்து, சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளி புதைக்கும் வாய்ப்பு நிறையவே உள்ளது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com